தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 220/மா/2022**

**நாள்: 19.01.2023**

திரு. இரா.மயில்சாமி, புதுவிளாங்குடி,
மதுரை – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர், மண்டலம் 02(வடக்கு)
மதுரை மாநகராட்சி, மதுரை – எதிர் மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5 என்ற முகவரியில் வசிக்கும் திரு. இரா.மயில்சாமி என்பவரின் 25.10.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.10.2022–ல் பெறப்பட்டு 220/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5 என்ற முகவரியில் வசிக்கும் திரு. இரா.மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 25.10.2022 நாளிட்ட தனது மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

மதுரை மாநகராட்சி மண்டலம்–2(வடக்கு) வார்டு 1, 20, 21க்கு உட்பட்ட புதுவிளாங்குடி நெடுஞ்சாலை பேருந்து நிறுத்தம் முதல் நேருஜி மெயின்ரோடு, காமாட்சி நகர், பழைய விளாங்குடி, மந்தை திடல், செங்கோல் நகர் மற்றும் தீக்கதிர் கண்ணன் டிப்பார்ட்மெண்ட் பேருந்து நிறுத்தம் வரையிலும் சாலை ஓரத்தில் மிகவும் ஆக்கிரமிப்பு செய்து உள்ளதால் இவ்வழியாக அரசு மாநகர பேருந்து இயக்கி வந்த நிலையில் ஆக்கிரமிப்பு சாலையின் இருபுறமும் உள்ளதால் பேருந்து செல்லமுடியாமல் உள்ளது. பேருந்து புதுவிளாங்குடி திண்டுக்கல் சாலையில் உள்ள AGS ராம்பாபு பெட்ரோல் பங்கில் வந்து திரும்பி சென்று விடுகிறது. இதனால் பழைய விளாங்குடி, செங்கோல் நகர், காமாட்சி நகர், மக்கள் சுமார் 1 ½ கிலோ மீட்டர் தூரம் நடந்து வந்து பஸ் ஏறும் சூழ்நிலை தற்போது உள்ளது. இதில் வயது முதிர்ந்தவர்கள், கர்ப்பிணிப்பெண்கள், பள்ளி, கல்லூரி செல்லும் மாணவ மாணவியர்கள், சிறுவர்கள்வரையுள்ளவர்களும் நடந்தே வந்து புதுவிளாங்குடி பஸ் நிறுத்தத்திற்கு வந்து

பல்வேறு ஊர்களுக்கு செல்ல வேண்டியுள்ளது. மேலும் அவசரகால ஆம்புலன்ஸ், தண்ணீர் லாரிகளும் இவ்வழியில் செல்வது மிக மிக கடினமான விசயமாகும். எனவே பொதுமக்கள் நலன் கருதி புது விளாங்குடி பஸ் நிறுத்தம் முதல் தீக்கதிர் கண்ணன் டிபார்ட்மெண்ட் பஸ் நிறுத்தம் வரையுள்ள இருபுறம் உள்ள சாலை ஆக்கிரமிப்புகளை முழுமையாக அளந்து அத்துமால் காண்பித்து முழுமையாக ஆக்கிரமிப்புகளை அகற்றித்தருமாறு வேண்டிக்கொள்கிறேன். .

2) மனுதாரர் புகார் மனு தொடர்பாக மதுரை மாநகராட்சி உதவி ஆணையரிடம் அறிக்கை கோரப்பட்டது. மதுரை மாநகராட்சி துணை ஆணையர் தனது 29.12.2022 நாளிட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

" நகர சார் ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படி புதுவிளாங்குடி முதல் கண்ணன் டிப்பார்ட்மெண்ட் வரை விளாங்குடி 1வது பிட் கிராமம், 107/1 மற்றும் 113/1ல் அமைந்துள்ள பாதையின் மீது 8 நிரந்தர ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டது. அதனை தொடர்ந்து பாதை அமைந்துள்ள மிக குறுகலான பகுதிகள் புல எண்.131ல் வருவாய் கிராம ஆவணங்களில் உட்பிரிவுகள் செய்யப்படவில்லை. தனி நபர்களால் விடப்பட்டுள்ள பாதையாக தெரிய வருகிறது. மேலும் சம்மந்தப்பட்டுள்ள பாதையின் மீது தற்காலிக ஆக்கிரமிப்புகளை உதவி பொறியாளர் முன்பு அளவை பணி செய்து காட்டப்பட்டுள்ளது. உதவி செயற்பொறியாளர்(திட்டம்) அவர்களின் குறிப்பின்படி புது விளாங்குடி திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை முதல் தீக்கதிர், கண்ணன் டிப்பார்ட்மெண்ட் வரை சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை 29.12.2022 அன்று அகற்றப்பட்டது. அதன் புகைப்பட நகல் இத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரம் தங்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என்று தெரிவித்துள்ளார்.

3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 03.01.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 21.12.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மதுரை மாநகராட்சியின் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் இருவரும் 03.01.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது பின்வரும் வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி புது விளாங்குடி 1 வது பிட் கிராமம் 107/1 மற்றும் 113/1ல் அமைந்துள்ள பாதையின் மீது 8 ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. மேற்கண்ட ஆக்கிரமிப்புகள் கடந்த 29.12.2022 அன்று அகற்றப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்து, அவற்றின் புகைப்படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம். மேலும் மதுரை மாநகராட்சி துணை ஆணையரின் 29.12.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

5) மனுதாரர் 03.01.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் உடல்நலக்குறைவால் ஆஜராகவில்லை. ஆனால் 05.01.2023 அன்று நடைபெற்ற பிரிதொரு மனுவின் மீதான நேரடி விசாரணையில் ஆஜராகும்போது இந்நேர்வு குறித்து தன் கைப்பட எழுதியுள்ள விவரங்களை முறைமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். அதில்,

" மதுரை மாநகராட்சி மண்டலம் (02) வடக்கு, வார்டு 1,20,21 புதுவிளாங்குடி தேசிய நெடுஞ்சாலை பேருந்து நிறுத்தம் முதல், நேருஜீ மெயின்ரோடு, காமாட்சி நகர், பழைய விளாங்குடி, மந்தைதிடல், செங்கோல்நகர், மற்றும் தீக்கதிர் கண்ணன் டிப்பார்ட்மெண்ட் பேருந்து நிறுத்தம் வரையிலும் உள்ள சாலை இருபுறங்களிலும் ராம்ப், படிக்கட்டுக்கள், தாழ்வாரம் மற்றும் கடைகள், காம்பவுண்டுவால் மற்றும் பால்பூத், டீக்கடைகள் அமைத்து ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டுள்ளதால், பேருந்துகள், ஆம்புலன்ஸ், பளளி பேருந்துகள், குடிநீர் வாகனங்கள் செல்ல இயலாமல் இருந்தும் பயணியர் பேருந்து மேற்படி வழித்தடத்தில் செல்ல முடியாததினால்

புதுவிளாங்குடி மெயின் ரோட்டில், வாகனம் நிறுத்தப்பட்டு வந்தது. மேற்படி வழித்தடத்தில் பயணிகள் பேருந்து செல்ல முடியாமல் இருப்பது குறித்து, மதுரை மாநகராட்சி ஆணையர் மற்றும் உதவி ஆணையர், மண்டலம்–02(வடக்கு) ரேஸ்கோர்ஸ் காலனி, மதுரை–7 அவர்களுக்கு 08.10.2022 தேதியில் புகார் மனு பதிவு தபாலில் அனுப்பி இருந்தேன். என் மனுவினை ஏற்று 29.12.2022 தேதியில் சுமார் 300 மீட்டர் தூரத்திற்கு மட்டும் ஒருசில ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது. பாலமுருகன் கோவில் வரையிலும் அகற்றப்பட்டது. அகற்றப்பட்ட தூரம் வரையிலும், பொதுமக்கள் சிரமம் இல்லாமல் சென்று வருவதால், மக்கள் பெருமகிழ்ச்சி அடைந்து வருகிறார்கள். மீதம் உள்ள சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் வரை ஆக்கிரமிப்புகளை அகற்றாமல் ஒரு கண்துடைப்பாகவே அதிகாரிகள் அகற்றாமல் சென்று விட்டார்கள்.

எனவே பாலமுருகன் கோவில், புதுவிளாங்குடியில் இருந்து காமாட்சி நகர், மந்தை திடல், செங்கோல் நகர், மயானம், தீக்கதிர் கண்ணன் டிபார்ட்மெண்ட் வரையிலும் உள்ள கடைகள், ராம்ப், படிக்கட்டுக்கள் காம்பவுன்ட் சுவர், தாழ்வாரம் போன்ற ஆக்கிரமிப்புகளை முற்றிலும் அகற்றியும் இதில் அதிகாரிகள் தயவுதாட்சியம் இன்றி ஆக்கிரமிப்புகளை அகற்றினால், போக்குவரத்து வாகனம், ஆம்புலன்ஸ், பள்ளி வாகனம், தண்ணீர் வாகனம், மற்றும் இரு சக்கர வாகன ஓட்டிகளும், தங்குதடையின்றியும், இலகுவாக, பொதுமக்கள் சென்று வரவும், இதில் மயானம் (சுடுகாடு) அருகில் மிகவும் ஆக்கிரமிப்பு செய்து, படிக்கட்டு, ராம்ப், செட் போட்டுள்ளார்கள்.

எனவே மேற்படி பாலமுருகன் கோவில், காமாட்சி நகர், மந்தை திடல், செங்கோல் நகர், மயானம், தீக்கதிர் கண்ணன் டிப்பார்ட்மெண்ட் வரையிலும் ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்ற விரைவான நடவடிக்கை எடுத்து எடுக்கப்பட்ட நடவடிக்கை மற்றும் அகற்றப்பட்டவைகளை, அறிக்கை தாக்கல் செய்ய மதுரை மாநகராட்சி ஆணையர், தல்லாகுளம், மதுரை–2 மற்றும் உதவி ஆணையர், ரேஸ்கோர்ஸ், மண்டலம்(02) வடக்கு, மதுரை–7 அவர்களுக்கு உத்தரவிடுமாறு மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களை வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, மனுதாரரின் 05.01.2023 நாளிட்ட கையால் எழுதப்பட்ட அறிக்கை, மதுரை மாநகராட்சி துணை ஆணையரின் அறிக்கை மற்றும் மதுரை மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் ஆகியோரது வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:

மனுதாரர் புதுவிளாங்குடி பகுதியில் திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஆக்கிரமிப்பினை அகற்ற கோரியுள்ளார். மனுதாரர் குறிப்பிட்டுள்ள புதுவிளாங்குடி 1வது பிட் கிராமம், 107/1 மற்றும் 113/1ல் அமைந்துள்ள பாதையில் 8 நிரந்தர ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து பாதை அமைந்துள்ள மிக குறுகலான பகுதிகள் புல எண்.131ல் வருவாய் கிராம ஆவணங்களில் உட்பிரிவுகள் செய்யப்படவில்லை. அது தனிநபர்களால் விடப்பட்டுள்ள பாதையாக தெரிய வருகிறது. சம்மந்தப்பட்டுள்ள பாதையின் மீது தற்காலிக ஆக்கிரமிப்புகளை உதவி பொறியாளர் முன்பு அளவை பணி செய்து காட்டப்பட்டுள்ளது. மேலும் புது விளாங்குடி திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஆக்கிரமிப்புகள் 29.12.2022 அன்று அகற்றப்பட்டது என்பதை துணை ஆணையரின் அறிக்கையிலிருந்து அறியமுடிகிறது. அது தொடர்பான புகைப்பட நகல்களும் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்காணும் பாதையில் உள்ள தற்காலிக ஆக்கிரமிப்புகள் மற்றும் விடுபட்டு இருக்கும் எஞ்சியிருக்கின்ற ஆக்கிரமிப்புகளை நேரடியாக தல ஆய்வு செய்து ஒரு மாத காலத்திற்குள் அகற்றிட தக்க நடவடிக்கை எடுக்க மதுரை மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இதில் தாமதம் தவிர்க்கப்பட வேண்டும்.

இதுகுறித்து நகராட்சிகளின் இயக்குநர் நேரடி கவனம் செலுத்தி முறைமன்றத்தின் ஆணைகளை நிறைவேற்றுவதை உறுதி செய்ய அறிவுறுத்தப்படுகிறார்.

2023-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 19–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு இரா. மயில்சாமி,
த/பெ. இராமலிங்கம்,
மனை எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி,
மதுரை – 625 018.

2)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

3)ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

4)இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

5)துணை ஆணையர்,
அறிஞர் அண்ணா மாளிகை,
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம், மதுரை – 625 002.

6)உதவி ஆணையர்,
மண்டலம் – 02 (வடக்கு)
மதுரை மாநகராட்சி,
மதுரை.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக